( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**


# முன்னோடிப் பரீட்சை - இல-10

## வினாத்தாள் - I


சுட்டெண்:- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.


(01) 


உரு A




உரு B


B உருவத்தை A உருவின் மீது வைக்கும்போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.

(1) 


(2) 


(3) 

(02) முதலாவது படம் அடுத்துத் தரப்பட்டுள்ள மூன்று உருக்களுள் ஒன்றினை வேறொரு திசையிலிருந்து பார்க்கும்போது காணப்படும் தோற்றத்தைக் குறித்து நிற்கிறது. முதற்படம் குறித்து நிற்கும் மிகச் சரியான உருவினைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

(03) 

இவ்வுருவில் பிழையாக வரையப்பட்டுள்ளது,

(1) வீட்டிலிருந்து வெளியேறும் புகை (2) பட்டம் (3) மரம்




Education

(04) டயர் தொழிற்சாலையொன்றின் மூலம் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களின் எண்ணிக்கைகளைக் கீழேயுள்ள பட வரைபு காட்டுகிறது.

| மாதங்கள் | உற்பத்தியளவு |
|---|---|
| ஜனவரி | ● |
| பெப்ரவரி | ● ◖ |
| மார்ச் | ● ● |
| ஏப்ரல் | ● ● ◖ |

பெப்ரவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களின் எண்ணிக்கை 150 ஆகும். மாதா மாதம் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் கோலத்தின்படி, ஜூன் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களின் எண்ணிக்கை,

(1) 350 (2) 300 (3) 450

(05) A  B  C 

சம நீளமுள்ள கம்பித் துண்டுகளைப் பயன்படுத்தி மேலே A, B, C ஆகிய கம்பிச் சட்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலேயுள்ள கோலத்தின்படி, D கம்பிச் சட்டகத்தை உருவாக்க தேவைப்பட்ட சம நீளமுள்ள கம்பித் துண்டுகளின் எண்ணிக்கை,


(1) 38 (2) 32 (3) 36

(06) மேசைக்கு 6 கால்களும், கதிரைக்கு 4 கால்களும் உள்ளன. அத்தகைய 2 மேசைகளைச் சுற்றி 6 கதிரைகள் வீதம் வைக்கப்பட்டுள்ளன. அதன்படி, மேசைகளிலும், கதிரைகளிலும் உள்ள கால்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 36 (2) 60 (3) 52

(07) மே மாதம் முதலாம் திகதி புதன்கிழமை ஆகும். அதன்படி, அம்மாதத்தில் இருக்கக்கூடிய வியாழக்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும், சனிக்கிழமைகளினதும் எண்ணிக்கையின் கூட்டுத்தொகை,

(1) 12 (2) 18 (3) 14


(08) 



வட்டத்தினுள் உள்ள இரு வெற்றிடங்களிலும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றைய எண்ணின் மூன்று மடங்காக உள்ளது. அந்நான்கு எண்களினதும் கூட்டுத்தொகை 32 ஆகும். அதன்படி, வெற்றிடங்களில் இருக்கவேண்டிய எண்கள்,


(1) 5, 15 (2) 3, 9 (3) 6, 18

kalvi.lk

(09) பின்வரும் உருக்களில் இரண்டு ஏதோவோர் முறையில் சமனாகும். அதன்படி, சமனற்ற உருவைத் தெரிவு செய்க.


(1) 

(2) 

(3) 

(10)  இரு மனிதர்கள் உரு காட்டும் முறையில் ஒரே இடத்திலிருந்து எதிர்த்திசைகளுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு 20 கிலோமீற்றர் எனும் வேகத்தில் பயணித்தனர். ஒரே நேரத்தில் இருவரினதும் பயணம் ஆரம்பித்தது எனின், 4 மணித்தியாலங்களுக்குப் பின் அவர்கள் இருவருக்குமிடையிலான தூரம்,


(1) 80km (2) 120km (3) 160km

(11) 



இத்தாயக்கட்டையில் தற்போது மேலே இருப்பது இலக்கம் 4 ஆகும். மேலே மீண்டும் இலக்கம் 4 வருவதற்கு அம்புக்குறி காட்டும் திசைக்குத் தாயக்கட்டையைப் புரட்ட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை,


(1) 4 (2) 3 (3) 5

(12) 



இவ்வுருவிலுள்ள வட்டங்களில் இரண்டு வட்டங்களுக்கு உரித்துடைய எண்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 4

(13) 





A




B

உரு A யில் காட்டப்பட்டுள்ள வட்ட வடிவக் கடதாசியை 1, 2 எனும் புள்ளிக்கோடுகளின் வழியே இரண்டு தடவைகள் மடிக்கப்பட்டு, அதன் பின்னர் உரு B யில் காட்டப்பட்டுள்ளபடி, இரு பகுதிகள் வெட்டி அகற்றப்பட்டன. அதன்படி, அக்கடதாசித் துண்டை விரித்தால் காணக்கிடைக்கும் முறை,

(1) 

(2) 

(3) 

(14) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்ற ஆண் பிள்ளையொன்று தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று,

(1) இக்கண்ணாடி காட்டுபவரின் பாட்டன் எனது அப்பா ஆவார்.
(2) இக்கண்ணாடி காட்டுபவரின் அண்ணா எனது தம்பி ஆவார்.
(3) இக்கண்ணாடியில் காணப்படுபவர் எனது தாயாரின் மகள் அல்ல.


(15)

| | | |
|---|---|---|
| வித்து | சுவர் | சித்தி |
| தியாகி | | தும்பு |
| புதிசு | கிளவி | |

இக்கூட்டினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒரு கோலத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடம் C இற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

**சித்தி → தியாகி → கிளவி →** ........A........ → ........B........ → ........C........

(1) சுவர் (2) புதிசு (3) தும்பு

(16) 

இப்பெரிய செவ்வகத்தில் ஒரேயளவான ஐந்து சிறிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. இப்பெரிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டையின் அகலம் 4cm ஆகும். அதன்படி, பெரிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டையின் நீளம்,


(1) 6cm (2) 7cm (3) 5cm

(17) மூன்று பிள்ளைகள் பூக்கள் செய்வதற்கு எடுத்த நேரங்கள் பற்றி விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| பிள்ளைகளின் பெயர்கள் | பூக்கள் செய்வதற்கு செலவிடப்பட்ட நேரம் | செய்யப்பட்ட பூக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நியாஸ் | 3 மணித்தியாலங்கள் | 10 |
| கவின் | 12 மணித்தியாலங்கள் | 38 |
| பாலா | 4 மணித்தியாலங்கள் | 10 |


இவ்வட்டவணையின்படி, மிக வேகமாகப் பூக்களைச் செய்த பிள்ளை,

(1) நியாஸ் (2) கவின் (3) பாலா

(18) 

இப்பெரிய செவ்வக வடிவக் கட்டத்தினுள் செங்கற்கள் அடுக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, இப்பெரிய செவ்வக வடிவ கட்டத்தினைப் பூரணப்படுத்துவதற்கு இன்னும் தேவைப்படும் செங்கற்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 12 (2) 10 (3) 8

(19) 



இங்கு P, Q, R ஆகிய உருக்களினால் எரியும் மூன்று மண்ணெண்ணெய் விளக்குகளை காணலாம். இந்த மண்ணெண்ணெய் விளக்குகள் அணையும் ஒழுங்குமுறையைச் சரியாக எழுதியுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) Q, P, R (2) R, P, Q (3) Q, R, P

kalvi.lk

சுட்டெண்:-..............................


(20)

| | | | |
|---|---|---|---|
| 2 | 7 | 3 | 1 |
| 1 | 6 | 8 | 4 |
| 8 | 1 | 2 | 7 |
| 6 | 5 | 4 | 3 |

இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள இலக்கங்களிலிருந்து அடுத்தடுத்துள்ள மூன்று எண்களை கிடையாக அல்லது நிலைக்குத்தாக கூட்டும்போது விடை 12 ஆக கிடைக்கும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை,

(1) 3 (2) 5 (3) 4


(21)





இவ்வினாவில் □ மற்றும் △ ஆகிய குறியீடுகள் பத்தை விட குறைந்த எண்களைக் காட்டுகின்றது. அதன்படி, △ இக்குறியீடு காட்டுவது,




(1) 1 அல்லது 2 (2) 2 அல்லது 3 (3) 4 அல்லது 5

(22)





உரு A ஐ அம்புக்குறி காட்டும் திசைக்குச் $\frac{1}{2}$ சுற்று சுழற்றினால் உரு B கிடைக்கும். அதன்படி, இவ்வுருவை அதே முறையிலேயே $\frac{1}{2}$ சுற்று சுழற்றினால் கிடைக்கும் உரு,



(1)  (2)  (3) 

(23)





நான்கு பிள்ளைகள் சதுர வடிவமொன்றின் மீது நின்றுகொண்டிருக்கும் முறையை இவ்வுரு காட்டுகிறது. கிருபா நின்றுகொண்டிருப்பது விமலாவுக்கு வடக்குத் திசையிலாகும். அதன்படி, யமுனா நின்றுகொண்டிருப்பது கிருபாவுக்கு எத்திசையிலாகும்?

(1) தென்மேற்குத் திசையில் (2) வடகிழக்குத் திசையில் (3) தென்கிழக்குத் திசையில்

(24) வியாபாரி ஒருவரிடம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாம்பழங்கள் உள்ளன. அவற்றை 8 குவியல்களாகவும், அல்லது 6 குவியல்களாகவும், அல்லது 4 குவியல்களாகவும் வேறாக்கினால் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இரண்டு மாம்பழங்கள் மீதியாக இருக்கும். அதன்படி, வியாபாரியிடம் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை,

(1) 34 (2) 50 (3) 27

(25) குறிப்பிட்ட நாளில் காலை முதல் மாலை வரை ஒரு தூணின் நிழல் விழுந்துள்ள விதத்தைப் பின்வரும் உருக்கள் காட்டுகின்றன. எனினும் அவை ஒழுங்காக வரையப்படவில்லை. அவற்றை மீண்டும் ஒழுங்குபடுத்தும்போது 3 ஆவது சந்தர்ப்பத்திற்கு வரும் உரு,




(1) B (2) C (3) E

(26) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
  கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
  தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

இப்பாடல் உணர்த்தும் காலம்,

(1) காலை
(2) மாலை
(3) பகல்

(27) கமலிடம் ஒரேயளவான 37 சதுரமுகிகள் உள்ளன. அச்சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய மிகக் கூடிய கனவுருக்களின் எண்ணிக்கை,

(1) 19 (2) 18 (3) 14

(28)

| நகரங்கள் | மு.ப | பி.ப |
|---|---|---|
| அநுராதபுரம் | | 4.20 |
| இரத்தினபுரி | 6.30 | |
| நுவரெலியா | | 1.30 |
| காலி | 2.30 | |

ஒரு தினத்தில் பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து ஒவ்வொரு நகரத்திற்கும் பேருந்துகள் புறப்பட்ட நேரங்களை இவ்வட்டவணை காட்டுகிறது.

ஒவ்வொரு நகரத்தை நோக்கியும் பேருந்துகள் புறப்பட்ட நேரத்தின்படி, ஒவ்வொரு நகரத்தின் பெயரையும் ஒழுங்குமுறையில் எழுதினால் கிடைப்பது,

(1) அநுராதபுரம் - இரத்தினபுரி - நுவரெலியா - காலி (2) நுவரெலியா - அநுராதபுரம் - காலி - இரத்தினபுரி


(3) காலி - இரத்தினபுரி - நுவரெலியா - அநுராதபுரம்


kalvi.lk


(29) தென்னை மரத்திற்கும் கமுகு மரத்திற்கும் சரிநடுவில் பலா மரம் அமைந்துள்ளது. பலா மரத்திற்கும் தென்னை மரத்திற்கும் சரிநடுவில் மா மரம் அமைந்துள்ளது. மா மரத்திற்கும் பலா மரத்திற்கும் இடையிலான தூரம் 6m எனின், தென்னை மரத்திற்கும் கமுகு மரத்திற்கும் இடையிலான தூரம்,


(1) 18m (2) 24m (3) 12m

(30) மிகச் சரியான இலக்கங்களைக் கொண்ட கைக்கடிகாரத்தை தெரிவு செய்க.

(1) 


(2) 

(3) 

(31) 


பல சதுரமுகிகள் ஒன்றன் மீது ஒன்று வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. இந்த திண்மத்தை உருவாக்க எடுக்கப்பட்ட சிறிய சதுரமுகிகள் சேர்ந்து ஒரு பெரிய சதுரமுகியை உருவாக்கினால் எஞ்சியிருக்கும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 3

(32) 


இவ்வுருவினால் காட்டப்படுவது ஒரு கோலத்தின்,

(1) $\frac{1}{4}$ ஆகும். (2) $\frac{1}{8}$ ஆகும். (3) $\frac{1}{6}$ ஆகும்.

(33) 

இந்தக் கூட்டினுள்ளே வரையப்பட்டுள்ள உருக்களில் ஒரு உரு சரியான அளவுத்திட்டத்தில் வரையப்படவில்லை. அதன்படி, அந்த உரு,

(1) கோப்பை (2) கதிரை (3) புத்தகம்

(34) 


A, B, C எனும் ஒரேயளவான மூன்று மெழுகுவர்த்திகள் மூன்று நேரங்களில் ஒளிர வைக்கப்பட்டுள்ள முறைகளை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, மூன்று மெழுகுவர்த்திகளும் ஒளிர வைக்கப்பட்ட நேரங்களாக இருக்கக்கூடியது,


(1) A - மு.ப 8.10 , B - மு.ப 8.30 , C - மு.ப 8.50 (2) A - மு.ப 8.50 , B - மு.ப 8.10 , C - மு.ப 8.30

(3) A - மு.ப 8.30 , B - மு.ப 8.10 , C - மு.ப 8.50

(35) எப்பொழுதும் உண்மையாகும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) பிராணிகளுக்கு வால்கள் உண்டு. (2) நீருக்கு வடிவம் இல்லை. (3) பூக்கள் மணம் வீசும்.

(36) ரவி மற்றும் அவனின் மனைவி மீனா, அவனின் தாய், தந்தை, தங்கை, தம்பி, பாட்டன், பாட்டி, மாமா, மாமி ஆகியோருக்கிடையேயுள்ள உறவுமுறைகளைக் காட்டுவதற்குப் பின்வரும் உருவப்படம் வரையப்பட்டுள்ளது.




இவ்வுருவப்படத்திற்கேற்ப, ரவியின் மாமா, மாமியைக் குறித்துக் காட்டும் ஆங்கில எழுத்துக்கள்,

(1) T, U (2) P, Q (3) M, N

(37) ஒரு தந்தையினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 48 ஆகும். தந்தையின் வயது மகனின் வயதைப்போல மூன்று மடங்காகும். அதன்படி, தந்தையின் வயதிற்கும் மகனின் வயதிற்கும் இடையேயுள்ள வித்தியாசம்,

(1) 20 (2) 22 (3) 24

(38) P நகரத்திலிருந்து Q நகரம் நோக்கிச் செல்லும் பேருந்து மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் சென்று இரண்டு மணித்தியாலங்களில் Q எனும் நகரை சென்றடைந்தது. அதன் பின்னர் Q நகரத்திலிருந்து திரும்பி வரும்போது மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் பேருந்து பயணித்தது. அதன்படி, Q நகரத்திலிருந்து P நகரத்தை அடைய பேருந்துக்கு எடுக்கும் நேரம்,

(1) 4 மணித்தியாலங்கள் (2) 3 மணித்தியாலங்கள் (3) 6 மணித்தியாலங்கள்

(39) முதலில் தரப்பட்டுள்ள உருச்சோடியின் தொடர்புக்குச் சமனான தொடர்புள்ள உருச்சோடியைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

(40) சித்ராவின் வீடு சந்தியாவின் வீட்டிலிருந்து 4km தூரத்தில் அமைந்துள்ளது. வசந்தியின் வீடு சந்தியாவின் வீட்டிலிருந்து 9km தூரத்தில் அமைந்துள்ளது. அதன்படி, சித்ராவின் வீடு வசந்தியின் வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது?

(1) 5km (2) 13km (3) கூறமுடியாது

Education
kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-10

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

பௌர்ணமி தினமான இன்று முழுநிலா வானத்தில் பவனி வருகின்றது. இராப்பொழுதில் இருள் நீங்கி அவனியெங்கும் வெண்மை ஒளி பரவியிருக்கின்றது. தென்னோலைகளிலும் வாழையிலைகளிலும் நிலவொளி பட்டு பளபளக்கின்றது. வானத்தில் பறந்து செல்லும் பறவைகளைக் கூட கண்களால் பார்க்க முடிகின்றது.

(i) "விசும்பு" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை இப்பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. ..............................

(ii) "வெளிச்சம்" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை இப்பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. ..............................

(iii) தென்னோலை என்பதை பிரித்தெழுதுக. ..............................................................................

(iv) இப்பந்தியில் இடம்பெறும் இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக. ..............................................................

(v) "கண்களால்" என்பதை ஒருமை வடிவில் எழுதுக. ..............................................................

**(02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) அம்மா உடையில் இருந்த .............................. ( கரை , கறை ) யை கழுவுவதற்கு சிரமப்பட்டார்.

(ii) நாம் வாழும் புவி .............................. ( கோள , கோல ) வடிவமானது என விஞ்ஞானிகள் கூறினார்கள்.

(iii) கிளியின் .............................. ( அழகு , அலகு ) சிவப்பு நிறம் ஆகும்.

**(03) பின்வரும் எதிர்கால வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.**

நாங்கள் மைதானத்திற்குச் செல்வோம். :- ..............................................................

**(04) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம். :- ..............................................................

**(05) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

(i) குயிலோசை :- .............................................. (ii) சிற்றூர் :- ..............................................

**(06) பின்வரும் உவமைத் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.**

(i) எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல் :- ..............................................................

(ii) ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்போல் :- ..............................................................

**(07) கீழே இலங்கையின் தேசிய கீதத்தின் சில வரிகள் காட்டப்பட்டுள்ளன. அதிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான வரிகளை வெற்றிடங்களில் எழுதுக.**

நல்லெழில் பொலி சீரணி

..............................................................................................................

ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்

..............................................................................................................

**(08) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

ஓவியங்களைப் / அடைந்தனர் / நாட்டவர்கள் / சீகிரியா / அந்நிய / மகிழ்ச்சி / பார்வையிட்ட

..............................................................................................................

**(09) கீழே காட்டப்பட்டுள்ள கடிதத்தின் பகுதிகளை ஒழுங்குபடுத்தி தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 2023.05.14<br>அன்புள்ள அண்ணாவிற்கு,<br>இப்படிக்கு, | இல. 10,<br>டீ. எஸ். சேனாநாயக்க வீதி,<br>கண்டி. | அன்புத் தம்பி,<br>ச. சுதர்ஷன் | வணக்கம், நீங்கள் அனுப்பிய கடிதம் இன்று கிடைத்தது. உங்களை பார்ப்பதற்காக நாங்கள் அடுத்த வாரம் வருவோம். |

kalvi.lk

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

**(10) பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

(i) திங்கட்கிழமை :- ........................................ (ii) புதன்கிழமை :- ........................................

**(11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) How old are you? :- ........................................ (ii) Please stop here :- ........................................

**(12) கீழே வீட்டின் பகுதிகள் தரப்பட்டுள்ளன. இச்சொற்களின் இடைவெளிகளை நிரப்புக.**


(i) K...........tch...........n (ii) T..........il...........t (iii) B.........d r o..........m

**(13) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**


ஒபே பாசல குமக்த? :- ........................................................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

என்ன வேண்டும் ? :- ........................................................................................


(15) **A** 21:30 **B** 

A கடிகாரம் காட்டும் நேரத்தை B கடிகாரத்தில் வரைந்துக் காட்டுக. (மணித்தியால முள், நிமிட முள் என்பன மிகத் தெளிவாக வரையப்படல் வேண்டும்.)

(16) 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்காகும்? ..........................

(17) ரூபாய் 20.00 இலிருந்து ரூபாய் 1000.00 வரையான சகல நாணயத் தாள்களிலும் ஒவ்வொரு நாணயத் தாள் வீதம் என்னிடம் உள்ளன. அதன்படி, என்னிடமுள்ள பணத்தின் மொத்தப் பெறுமதி யாது? ..........................

(18) 


இவ்வுருவிலுள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது? ..........................

(19) சதுரமொன்று 10 சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதில் 8 பகுதிகள் நிழற்றப்பட்டிருந்தன. அதன்படி, நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக. ..........................

(20) XVIII இந்த உரோம எண்குறியை அமைப்பதற்கு ஒரே சம நீளமுள்ள 7 ஈர்க்குத் துண்டுகள் தேவைப்பட்டன. அதன்படி, ஒரே சம நீளமுள்ள 4 ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க 3 உரோம எண்குறிகளை எழுதுக. ..........................

(21) 

இக்கடிகாரத்தில் நேரம் $\frac{1}{2}$ மணித்தியாலத்திற்கு முன்னர் நின்றிருந்தது. அதன்படி, தற்போதைய நேரம் யாது? ..........................

(22) 

அருகில் தரப்பட்டுள்ள உருவின்படி, பின்வரும் வினாக்களில் உள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

**(i)** .......................................... வடகிழக்குத் திசையில் பை உள்ளது.


**(ii)** குடத்திற்கு .......................................... திசையில் கதிரை உள்ளது.

Education கல்வி

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(23) நீர்கொழும்பில் இருந்து கொழும்பிற்குச் சென்று மீண்டும் நீர்கொழும்பிற்கு வருவதற்கு 58km 530m தூரம் பயணம் செய்ய வேண்டும். அதன்படி, நீர்கொழும்பில் இருந்து கொழும்பிற்கான தூரம் யாது? ..........................................

(24) 


இவ்வுருவில் காணப்படும் திண்மத்திலுள்ள,

(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..................... (ii) முகங்களின் எண்ணிக்கை யாது? ...............

(25) ரூபாய் 36.00 க்கு 4 மாம்பழங்களை வாங்கலாம். மாம்பழமொன்றின் விலை ரூபாய் 3.00 இனால் அதிகரித்தால் 4 மாம்பழங்கள் வாங்குவதற்குத் தேவைப்படும் மொத்தப் பணம் யாது? ..........................................

(26) ஓர் செங்கற் குவியலில் 30910 செங்கற்கள் உள்ளன. அச்செங்கற் குவியலிலுள்ள செங்கற்களின் எண்ணிக்கை 31000 ஆவதற்கு இன்னும் எத்தனை செங்கற்கள் சேர்க்கப்பட வேண்டும்? ..........................................

(27) 1, 2, 4, 7, 11, [ ] இவ்வெண் கோலத்தில் அடுத்துவரும் எண்ணை வெற்றுக்கூட்டினுள் எழுதுக.

(28) 


இத்தராசு சமநிலையானது. அதன்படி, இத்தராசின் A, B பக்கங்களில் உள்ள படிக்கற்களின் மொத்த நிறை யாது? ..........................................

(29) பாத்திரமொன்றை நிரப்புவதற்கு $3l\ 700ml$ நீர் தேவைப்படுகின்றது. அதன்படி, அவ்வாறான மூன்று பாத்திரங்களை நிரப்புவதற்குத் தேவையான நீரின் அளவு யாது? ..........................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) பூவின் எப்பகுதியில் இதழ்கள் உதிர்ந்து காயாக மாறும்?
(1) புல்லி (2) தம்பம் (3) சூலகம்

(31) இலங்கையில் மலைகள் அதிகமாக காணக்கிடைப்பது,
(1) மத்திய மாகாணத்தில் (2) மேல் மாகாணத்தில் (3) வட மாகாணத்தில்

(32) வீட்டு ஈ முட்டைகள் இடுவது,
(1) தாவர இலைகளின் மீது (2) குப்பைக்கூளங்களில் (3) சுத்தமான நீரில்

(33) காயை முழுமையாக நடுவதன் மூலம் நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளும் தாவரங்கள்,
(1) பப்பாசி, மா (2) பலா, தோடை (3) தென்னை, கமுகு

(34) இலங்கையின் அகலம் அளக்கப்படுவது,
(1) கொழும்பில் இருந்து சங்கமன்கந்த முனை வரையாகும். (2) கொழும்பில் இருந்து திருகோணமலை வரையாகும்.
(3) காலியில் இருந்து மட்டக்களப்பு வரையாகும்.

(35) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள் சுழல்வது,
(1) புவியைச் சுற்றியாகும். (2) சூரியனைச் சுற்றியாகும். (3) சந்திரனைச் சுற்றியாகும்.

(36) பூக்களைப் பயன்படுத்தி பாணி உற்பத்தி செய்யப்படும் தாவரம் அல்லாதது,
(1) கித்துள் (2) தென்னை (3) கரும்பு

(37) கடிதமொன்றை பாதுகாப்பாக தபாலில் அனுப்புவதற்கு செய்ய வேண்டியது,
(1) கடிதத்தை தபால் பெட்டியில் போடாமல் தபால் காரியாலயத்தில் ஒப்படைப்பதன் மூலம்.
(2) கடிதத்தை பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம்.
(3) கடிதத்திற்கு முத்திரைகளை கூடுதலாக ஒட்டுவதன் மூலம்.

(38) நுளம்புகளை அழிப்பதற்கு மிகவும் இலகுவானது,
(1) நீரில் வாழும் சந்தர்ப்பத்தில் (2) பறந்து செல்லும் சந்தர்ப்பத்தில்
(3) எமது உடலில் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் சந்தர்ப்பத்தில்

(39) பெரும்பாலும் வெள்ளை நிறப் பூக்கள் பூப்பது,
(1) காலை வேளையில் (2) பகல் வேளையில் (3) இரவு வேளையில்


(40) இலங்கையில் முதலாவது கட்டப்பட்ட வரலாறு சிறப்புமிக்க தூபி,
(1) அபயகிரி (2) தூபாராம (3) ருவான்வெலிசாய

(41) தேசியக் கொடியிலுள்ள அரச இலைகளின் நிறம்,
(1) மஞ்சள் (2) சிவப்பு (3) பச்சை

(42) இலங்கைக்கு எந்த திசையில் மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் அமைந்துள்ளன?
(1) மேற்குத் திசையில் (2) கிழக்குத் திசையில் (3) வடக்குத் திசையில்

kalvi.lk

(43) அலங்காரத் தையல் வகையில் அடங்காதது,

(1)  (2)  (3) 


(44) கரையோரப் புகையிரதப் பாதை,

(1) கொழும்பிலிருந்து மட்டக்களப்பு புகையிரதப் பாதை (2) கொழும்பிலிருந்து மாத்தறை புகையிரதப் பாதை

(3) கொழும்பிலிருந்து அவிசாவளை புகையிரதப் பாதை

(45) மனிதனின் அடிப்படைத் தேவைகள் அல்லாதது,

(1) தொலைக்காட்சி, தொலைபேசி (2) நீர், உணவு (3) உடை, வீடு

(46) 


இரண்டு மின்சூள் மின்குமிழ்கள் உலர் மின்கலம் ஒன்றிற்குச் செப்புக் கம்பியினால் இணைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A மின்குமிழ் ஒளிரும், B மின்குமிழ் ஒளிராது.

(2) A, B ஆகிய இரு மின்குமிழ்களும் ஒளிரும்.

(3) A மின்குமிழ் ஒளிராது, B மின்குமிழ் ஒளிரும்.

(47) விற்றமின் D குறைபாட்டினால் ஏற்படும் நோய்,

(1) கண் பார்வை குறைவடைதல். (2) எலும்பு நோய்கள் ஏற்படல். (3) உடல் எடை குறைவடைதல்.

(48) பூவுக்குள் சிறிய பூக்கள் அதிகமாக உள்ள பூ வகை அல்லாதது,

(1) செவ்வரத்தை (2) தொட்டாற்சுருங்கி (3) சூரியகாந்தி

(49) சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள் காணப்படும் வித்து,


(1) ஆமணக்கு (2) குன்றிமணி (3) சோளம்

(50) எரிபொருள் நிரப்பும் ஓர் இடத்தில் காணக்கிடைக்கும் அறிவித்தல்,

(1) பாதணிகளைக் கழற்றிவிட்டு உள்ளே செல்க. (2) தயவுசெய்து அமைதியைப் பேணவும்.

(3) புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

(51) சாய்தளம் ஒன்றினூடாக பாரத்தை மேலே உயர்த்தும் முறை கீழே உருக்களில் காணப்படுகின்றன. அதன்படி, மிக இலகுவாகப் பாரத்தை மேலே உயர்த்தக்கூடிய சந்தர்ப்பம்,

(1)  (2)  (3) 

(52) A, B ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ள பறவைகளின் பெயர்கள்,

A  B 

(1) A - இரட்டைச் சொண்டுக்குருவி
B - ஆந்தை

(2) A - மீன்கொத்தி
B - குயில்

(3) A - மரங்கொத்தி
B - செண்பகம்

(53) விழாவொன்றை ஆரம்பிக்கும்போது முதலில் இடம்பெறுவது,

(1) குத்துவிளக்கு ஏற்றல் (2) நன்றியுரை (3) பிரதம அதிதியின் உரை

(54) புவி தன்னைத் தானே சுற்றுவது,

(1) கிழக்கிலிருந்து மேற்கிற்கு (2) மேற்கிலிருந்து கிழக்கிற்கு (3) வடக்கிலிருந்து தெற்கிற்கு

(55) புதிய பழங்களில் அதிகம் இருப்பவை,

(1) புரதம் (2) காபோவைதரேற்று (3) விற்றமின்

(56) மிகத் தொலைவில் உள்ள பொருளொன்றை அண்மையில் பார்ப்பதற்குப் பயன்படுவது,

(1) தொலைக்காட்டி (2) முகம் பார்க்கும் கண்ணாடி (3) நுணுக்குக்காட்டி

(57) | ஓணான், பல்லி, கிளி, தவளை | இக்கூட்டினுள் காட்டப்பட்டுள்ள பிராணிகள்,

(1) தாவரவுண்ணிகள் (2) முட்டைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் பிராணிகள் (3) ஊர்வனங்கள்

(58) இலங்கையின் பிரதான விமான நிலையம் அமைந்துள்ள மாகாணம்,

(1) தென் மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) மேல் மாகாணம்

(59) சங்கீதத்தில் உள்ள ஸ்வரங்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 7 (3) 8

**(60) "நான் வண்டியில் கட்டப்பட்ட மாடு ஆவேன்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
**(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................................................................

(2) ..........................................................................................................................................

(3) ..........................................................................................................................................

Education கல்வி
kalvi.lk